வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,663,34,89,000/–, மூலதனக் கணக்கில் ரூ.81,76,57,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–4–2023), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

91. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜே1)த் துறையின் 15–3–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 25–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

92. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பயணப்படி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பொது (நிருவாகம் I & சட்டமன்றம்)த் துறையின் 2–3–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 143–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2023 ஏப்ரல் 17]
[1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

93. 2020–2021 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

94. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டடட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/2016) 77(4) மற்றும் 78(2) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

95. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டடட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/2016) 77(4) மற்றும் 78(2) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

96. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

97. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2003 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

98. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2003 ஆம் ஆண்டு தேசிய

[2023 ஏப்ரல் 17

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

99. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2003 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

100. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2003 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/2013) 16(6)(f) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

205. 2020–2021 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ்–ஆங்கிலம்)

206. மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

207. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

208. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

209. மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

210. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

211. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

212. 'பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு' என்கிற சிறுநூல். (தமிழ்–ஆங்கிலம்)